## சேலம் மாநகராட்சி

**2024ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.45 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள் 2023, அத்தியாயம் 4, பகுதி I-ன் கீழ் சேலம் மாநகராட்சியின் அவசரக்கூட்டம் நடைபெறும்.**

---

### பொருள்கள்

1) சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டலத்திற்கு உட்பட்ட கோட்டம் எண். 37–ல் அம்மாபேட்டை கிராமம் சேலம் தெற்கு நகர புல எண்.387–க்கு தற்போதைய சர்வே எண்.332–க்கு வார்டு AL, பிளாக்–24, T.S.NO.30/3Part உட்படுகிறது. மேற்படி இடம் திரு. K.கார்த்திகேயன், த/பெ. குழந்தைவேலு என்பவருக்கு சொந்தமானது. மேற்படி நில உரிமைதாரர் 10003 சதுரடிகள் கொண்ட நிலத்தினை கழிவுநீர் கால்வாய் அமைக்கவும், வழிதடத்திற்காகவும் சேலம் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் பெயரில் தானமாக ஒப்படைப்பு செய்ய சம்மதம் தெரிவித்துள்ளதன்படி சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.347 நாள்.27.09.2024–ன்படி மேற்கண்ட பொது மக்கள் நலன்கருதி நிலம் தானமாக பெற அனுமதி வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்கண்ட மாமன்ற தீர்மானத்தின்படி பொது மக்களின் அடிப்படை வசதிகளை கருத்தில் கொண்டு கழிவு நீர் கால்வாய் கட்டுமானத்திற்கும் மற்றும் மழைநீர் செல்வதற்கும் பொது மக்கள் வழிதடம் செல்லவும் ஏதுவாக மேற்கண்ட நிலத்தினை சேலம் மாநகராட்சி பராமரிப்பிற்கு தானமாக சர்வ சுதந்திரமாய் அனுபவித்துக்கொள்ள இணை சார் பதிவாளர் சேலம் (கிழக்கு), தான ஒப்படைப்பு பத்திரம் எண்.1–4739/2024 எண்ணிட்ட சேலம் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும் பின்னிட்டு இனி இப்பதவி வகிப்போர்களுக்கு தான ஒப்படைப்பு பத்திரம் 24.09.2024–ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி..

மேலும், சேலம் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும் பின்னிட்டு இனி இப்பதவி வகிப்போர்களுக்கு தான ஒப்படைப்பு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ள நிலத்தினை சேலம் மாநகராட்சி ஆணையாளர் பெயரில் பட்டா பெயர் மாற்றம் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(இ11/16353/2024)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

2) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் கடித எண். SLM/ C1GXDKRI / 4569/ 2022/ TCP நாள்:16/12/2022 சேலம் சூரமங்கலம் ரெட்டியூர் கிராமம் வார்டு-C, பிளாக்-4, (S.F.No.33/1P, 34/1B1, 34/1B2, 34/1B3, 34/1B4, 34/1B5, 34/3A) T.S.No: 12/2, 12/3, 12/4, 12/14, 12/16, 12/21, 13/48 என்ற எண்ணில் அமைந்துள்ள மொத்தம் 4.56 ஏக்கர் (அ) 18,453.00 சதுர மீட்டர் பரப்பில் மனுதாரர் திரு. வி.பழனியப்பன் த/பெ விவேகானந்தன் சேலம், என்பவர் அமைத்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் 59 மனையிடங்களுக்கு தொழில்நுட்ப / திட்ட அனுமதி மனை பிரிவு அனுமதி எண் - SWP/ DTCP/ SALEM/ LAYOUT No.57/2022 & Planning Permission No.82 / 2022ல என எண்ணிட்டு வழங்கப்பட்டுள்ளது.

உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு சாலை வடிவமைப்பின்படி மனைப்பிரிவு உத்தேச சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் அமைத்து மாநகராட்சிக்கு சார் பதிவாளர் சேலம் மேற்கு அலுவலக ஆவண எண். 9538/2022 நாள்-07.10.2022-ன்படி ஆணையாளர் சேலம் மாநகராட்சி அவர்கள் பெயரில் தானப்பத்திரம் பதிவு செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சி சார் ஆய்வாளர் அவர்களின் அறிக்கையில் மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதியில் உள்ளவாறு சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்கள் மூலை முடக்குகள் நிலவியலில் அமைந்துள்ளன என்றும் சூரமங்கலம் சார் பதிவாளர் சேலம் மேற்கு அலுவலகத்தில் தானமாக வழங்கப்பட்ட பொது ஒதுக்கீடு குறித்து பதிவு செய்துள்ள விபரங்கள் ஆகிய இரண்டும் ஒப்புநோக்கும் போது அளவீடுகள் சரியாக உள்ளது என தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி..

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் உதவி பொறியாளர் அவர்களின் அறிக்கையில் நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம் அவர்களால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப அனுமதியின்படி தார்சாலைகள், குடிநீர் வசதி தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது எனவும், இருசாலைகள் சந்திப்பில் உள்ள மூலை முடுக்குகள் முறையாக அமைக்கப்பட்டுள்ளன எனவும், அளவீடுகள் சரியாக உள்ளது என தெரிவித்துள்ளார்.

சேலம் சூரமங்கலம் ரெட்டியூர் கிராமம் வார்டு-C, பிளாக்-4, (S.F.No.33/1P, 34/1B1, 34/1B2, 34/1B3, 34/1B4, 34/1B5, 34/3A) T.S.No: 12/2, 12/3, 12/4, 12/14, 12/16, 12/21, 13/48 என்ற எண்ணில் அமைந்துள்ள மொத்தம் 4.56 ஏக்கர் (அ) 18,453.00 சதுர மீட்டர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்ட 59 குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை மாநகராட்சிக்கு தானமாக பதிவு செய்து ஒப்படைப்பு செய்ததை ஏற்கவும், மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி அமைப்பிற்கான இறுதி ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பார்வைக்கு பணிந்து வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

1) சேலம் மாநகராட்சிக்கு மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானமாக பதிவு செய்து ஒப்படைப்பு செய்ததை மன்றம் ஏற்கலாம்.
2) மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி அமைப்பிற்கான இறுதி ஒப்புதல் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(இ9/13301/2024)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

3) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் கடித எண். SLM/ ZPVPU0FH / 20305 2023/TCP நாள்:30.12.2023ல் சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் கிராமம் Ward-P, Block-15, நகர சர்வே எண்.2/2,3,4,5/3, 33/4 (பழைய சர்வே எண்.24/2Fpt, 25/2Apt, 2Bpt, 2Cpt, 2Dpt, 2Ept)-என்ற எண்ணில் அமைந்துள்ள மொத்தம் 2.31 ஏக்கர் (அ) 9348.13 சதுர மீட்டர் பரப்பில் மனுதாரர் திருமதி. ஜனனிராஜேஸ்வரி க/பெ கார்த்திராஜீ சேலம், என்பவர் அமைத்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் 39 மனையிடங்களுக்கு தொழில்நுட்ப / திட்ட அனுமதி மனை பிரிவு அனுமதி எண் - SWP/ DTCP/ SALEM/ LAYOUT No.321/2023 & Planning Permission No.113/2023 என எண்ணிட்டு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி..

உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு சாலை வடிவமைப்பின்படி மனைப்பிரிவு உத்தேச சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் அமைத்து மாநகராட்சிக்கு சார் பதிவாளர் சேலம் மேற்கு அலுவலக ஆவண எண்.9740/2023 நாள்-29.12.2023-ன்படி ஆணையாளர் சேலம் மாநகராட்சி அவர்கள் பெயரில் தானப்பத்திரம் பதிவு செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சி சார் ஆய்வாளர் அவர்களின் அறிக்கையில் மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதியில் உள்ளவாறு சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்கள் மூலை முடக்குகள் நிலவியலில் அமைந்துள்ளன என்றும் சூரமங்கலம் சார் பதிவாளர் சேலம் மேற்கு அலுவலகத்தில் தானமாக வழங்கப்பட்ட பொது ஒதுக்கீடு குறித்து பதிவு செய்துள்ள விபரங்கள் ஆகிய இரண்டும் ஒப்புநோக்கும் போது அளவீடுகள் சரியாக உள்ளது என தெரிவித்துள்ளார்.

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் உதவி பொறியாளர் அவர்களின் அறிக்கையில் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப அனுமதியின்படி தார்சாலைகள், குடிநீர் வசதி தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது எனவும், இருசாலைகள் சந்திப்பில் உள்ள மூலை முடுக்குகள் முறையாக அமைக்கப்பட்டுள்ளன எனவும், அளவீடுகள் சரியாக உள்ளது என தெரிவித்துள்ளார்.

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் கிராமம், Ward-P, Block-15, நகர சர்வே எண்.2/2,3,4,5/3, 33/4 (பழைய சர்வே எண்.24/2Fpt, 25/2Apt, 2Bpt, 2Cpt, 2Dpt, 2Ept)-என்ற எண்ணில் அமைந்துள்ள மொத்தம் 2.31 ஏக்கர் (அ) 9348.13 சதுர மீட்டர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்ட 39 குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை மாநகராட்சிக்கு தானமாக பதிவு செய்து ஒப்படைப்பு செய்ததை ஏற்கவும், மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி அமைப்பிற்கான இறுதி ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பார்வைக்கு பணிந்து வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

1) சேலம் மாநகராட்சிக்கு மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானமாக பதிவு செய்து ஒப்படைப்பு செய்ததை மன்றம் ஏற்கலாம்.
2) மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி அமைப்பிற்கான இறுதி ஒப்புதல் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(இ9/6420/2024)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்) ஆ, இராமச்சந்திரன்**
**மேயர்**
**சேலம் மாநகராட்சி.**

**சேலம்-1.**
**25-10-2024.**